
‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!



தலைமைத் தேர்தல் ஆணையர்

பதவி விலகக்கோரி மீண்டும் போராட்டம்!

டெல்லியில் பரபரப்பு!

புதுடெல்லி, அக். 8 - தலைமை தேர்தல் ஆணையர் பதவி விலக கோரி டெல்லியில் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களை காவல்துறையினர் வலுக்கட்டாயமாக கைது செய்ததால் பரபரப்பு நிலவியது.

SIR உட்பட தேர்தல் ஆணையத்தின் பல்வேறு நடவடிக்கைகளில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், தன்னிச்சையாக செயல்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. இரண்டு தேர்தல் ஆணையர்களின் கருத்துக்கு அவர் செவி கொடுக்கவில்லை என்றும் புகார் எழுந்தது. இதையடுத்து,

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என்று ஆம் ஆத்மி, கரப்பான்பூச்சி ஜனதா கட்சி மற்றும் பல்வேறு மாணவர், இளைஞர் அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன. இந்நிலையில், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலகக்கோரி டெல்லியில் இளைஞர்கள் மீண்டும் போராட்டத்தில் குதித் துள்ளனர். இளைஞர்களை தடுக்க போலீசார் குவிக்கப்பட்டிருந்த நிலையில் தடையை மீறி போராட்டம் நடத்தினர். தடையை மீறி போராடிய வர்களை வலுக்கட்டாய மாக போலீசார் கைது செய்தனர். இதனால் டெல்லியில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலகக் கோரி நடைபெற்ற போராட்டங்கள் தொடர்ந்து மூன்று நாட்களாக நீடித்தன. காந்தி ஜெயந்தியான அக்டோபர் 2ஆம் தேதி தொடங்கிய இந்தப் போராட்டங்கள் மூன்றாவது நாளாக நேற்றும் நீடித்தது.

செப்டம்பரில் மட்டும் 5 சதவிகிதம் வீழ்ச்சி!

தமிழ்நாட்டில் தொடர்ந்து 3 மாதங்களாக சரியும் ஜி.எஸ்.டி. வருவாய்!

முன்னாள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு விமர்சனம்!

சென்னை, அக். 8 - “கடந்த மூன்று மாதங்களாக தொடர்ந்து தமிழ் நாட்டின் ஜி.எஸ்.டி. வருவாய் சரிந்து வருகிற தென்றும் செப்டம்பரில் மட்டும் 5 சதவிதம் வீழ்ச்சியடைந்துள்ளது” என்றும் முன்னாள் நிதி அமைச்சா தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

இதுகுறித்து முன்னாள் அமைச்சர் தங்கம் தென்ரைசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மூன்று மாதங்களாகத் தொடர்ந்து சரியும் தமிழ் நாட்டின் ஜிஎஸ்டி வருவாய், செப்டம்பரில் மட்டும் 5% வீழ்ச்சியடைந்துள்ளது!

ஒரு மாநிலத்தில் வசூலிக்கப்படும் மொத்த ஜிஎஸ்டி என்பது, அதன் மொத்த பொருளாதார நடவடிக்கைகளை பிரதிபலிப்பதாகும். எனவே, மாநிலத்திற்குள் நடைபெறும் பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிவர்த்தனைகள் தொடர்ந்து குறைவது குறித்தும், உள் நாட்டு பொருளாதாரச் செயல்பாடுகள் குறித்தும் இதனால் முக்கியமான



கேள்விகள் எழுகின்றன.

வரி விகிதக் குறைப்புக்குப் பிறகும் இந்தச் சரிவு தொடர்கிறது. ஆனால், உண்மையான பொருளாதார நிலையைப் பேசாமல் ‘Post Settlementக்குப் பிறகு 17% உயர்வு ஏற்பட்டுள்ளது என்ற கணக்கை மட்டும் முன்வைத்து சமூக வலைதளங்களில் பல காணொளிகளைக் கொண்டு சிலர் இதை நியாயப்படுத்தி வருகின்றனர்.

17% பிந்தைய வருவாய் உயர்வைக் காட்டிக் குழப்புவது உண்மையை மறைக்காது. மாநிலத்திற்குள் வரி வசூல் ஏன் தொடர்ந்து குறைகிறது என்பதற்கு பதில் சொல்லாமல், வெளி மாநிலங்களில் இருந்தும் இறக்குமதி மூலமாகவும் பெறப்படும் பொருட்கள் மீதான IGST வருவாய் எண்ணிக்கையைக் காட்டுவது எந்த வகையிலும் நமது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி நிலைக்கான முழுமையான விளக்கம் அல்ல!

வருவாய் எண்ணிக்கைகளில் விளையாடுவதை விட்டுவிட்டு, தமிழ்நாட்டின் உள்நாட்டு பொருளாதாரம் ஏன் தேய்கிறது என்பதற்கு த.வெ.க. அரசு பதில் சொல்ல வேண்டும்!

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

ஞானேஷ் குமார் தன்னிச்சையாக செயல்பட்டது நிரூபணமானால்

தேர்தல் ஆணைய முடிவுகளை ரத்து செய்வோம்!

உச்சநீதிமன்ற நீதிபதிகள் எச்சரிக்கை! தமிழக சட்டப்பேரவை தேர்தலும் ரத்து செய்யப்படுமா?

புதுடெல்லி, அக். 8 – எஸ்.ஐ.ஆர். பணிகளின் போது தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தன்னிச்சையாக செயல்பட்டது நிரூபணமானால், அவரால் எடுக்கப்பட்ட முடிவுகளை ரத்து செய்வோம் என்று உச்ச நீதிமன்றம் எச்சரித்துள்ளது. வாக்காளர் பெயர் சேர்ப்புக்கான படிவம் 6ல் திருத்தம் செய்யப்பட்டதை உச்ச நீதிமன்றம் ஒப்புதல் தர வில்லை என்று நீதிபதிகள் கூறினர். இந்த விவகாரம் தொடர்பாக தலைமைத் தேர்தல் ஆணையர், இரு தேர்தல் ஆணையர்களுக்கு நோட்டீஸ் அனுப்பவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர். இந்த வழக்கில் தேர்தல் ஆணையத்தின் முடிவுகள் ரத்தானால், எஸ்.ஐ.ஆர். பணிக்கு பின் நடந்த தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலின் முடிவுகளும் ரத்தாகுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

நாடு முழுவதும் நடத்தப்படும் வாக்காளர் தீவிர திருத்தம் பணி (எஸ்.ஐ.ஆர்.) தொடர்பான விவகாரத்தில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், பல முக்கிய விவகாரங்களில் மற்ற இரு தேர்தல் ஆணையர்களின் ஆட்சேபனையை மீறியும், அவர்களுக்கு தகவல் தெரிவிக்காமலும் தன்னிச்சையாக பல முடிவுகளை எடுத்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இதையடுத்து இந்த விவகாரம் தற்போது நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தி உள்ளது. அதேபோன்று ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள், மாணவர் அமைப்புகள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றன.

இதுபோன்ற நிலையில், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாருக்கு எதிராக பாட்னாவைச் சேர்ந்த ராகேஷ் குமார் சிங் மற்றும் வழக்கறிஞர் சைலேந்திர மணி திரிபாதி ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் பொதுநல மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். அதில், ஒட்டுமொத்த தேர்தல் ஆணையத்திற்கு சொந்தமான சட்ட அதிகாரங்களை மீறி ஞானேஷ் குமார் தனிப்பட்ட முறையில் செயல்பட்டு வருகிறாரா என்பதை தீர்மானிக்க வேண்டும். ஒரு வேளை அவ்வாறு இருந்தால் தன்னிச்சையாக எடுக்கப்பட்ட முடிவுகள் அங்கீகரிக்கப்படாதவை என அறிவித்து தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக இந்த வழக்கில் ஒரு இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும் வரையில் ஞானேஷ்குமாரை இடைநீக்கம் செய்ய வேண்டும். இதைத்தவிர, கூட்டாக முடிவெடுத்தல் தொடர்பான சட்டப்பூர்வ நடைமுறையை மீறியதற்காக தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற அதிகாரிகள் மீது குற்றவியல் நடவடிக்கைகளை தொடங்க வேண்டும் என்று வலியுறுத்தி தெரிவித்திருந்தனர். இதையடுத்து மேற்கண்ட மனுக்கள் அனைத்தும் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதிகள் ஜாய்மாலயா பாகூஇ மற்றும் வி.மோகனா ஆகியோர் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் விகாஸ் சிங் மற்றும் மேனகா குருசாமி, எஸ்.ஐ.ஆர். பணி தொடர்பாக தேர்தல் ஆணையத்தின் பெயரில் 14 முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும், அவற்றில் இரு தேர்தல் ஆணையர்களும் ஆட்சேபனை தெரிவித்திருந்த நிலையில், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தன்னிச்சையாக முடிவுகளை மேற்கொண்டுள்ளார்.

எனவே தேர்தல் ஆணையர்கள் இல்லாமல் எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் ரத்து செய்ய வேண்டும். அதேபோன்று தலைமைத் தேர்தல் ஆணையரை இடைநீக்கம் செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும். மேலும் தேர்தல் ஆணையம் பல உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு என்பதால், முடிவுகள் ஒருமனதாக எடுக்கப்பட வேண்டும். ஒருமித்த முடிவு இல்லாத பட்சத்தில் பெரும்பான்மை அடிப்படையில் முடிவு எடுக்கப்பட வேண்டும். இதைத்தான் சட்ட விதிகளும் கூறுகிறது என்று தெரிவித்தார். அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி, ஞானேஷ் குமாரை இடைநீக்கம் செய்தால் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் பாதிக்கப்படும்.

எதிர்வரவுள்ள தேர்தல்களை யார் நடத்துவார்கள் என்று கேள்வியெழுப்பினார். அதற்கு பதிலளித்த வழக்கறிஞர் விகாஷ் சிங், மற்ற இரு தேர்தல் ஆணையர்களால் பணிகளை மேற்கொள்ள முடியும் என்று பதிலளித்தார். இதையடுத்து நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை இடைநீக்கம் செய்வது தொடர்பாக ஒருதலைப்பட்சமான இடைக்கால உத்தரவை உடனடியாக பிறப்பிக்க முடியாது. முதலில் தேர்தல் ஆணையம் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரின் பதிலைப் பெற வேண்டும். தேர்தல் ஆணையத்தின் முடிவுகள் ஒருமனதாகவோ அல்லது பெரும்பான்மை அடிப்படையிலோ எடுக்கப்பட வேண்டும்.

தேர்தல் ஆணையத்தின் முடிவுகள் சட்டத்துக்கு உட்பட்டே எடுக்கப்படுகின்றன என்று நாங்கள் கருதுகிறோம். தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தன்னிச்சையாக சட்டத்தை மீறி முடிவுகள் எடுத்தது உறுதியானால், அவற்றை ரத்து செய்வது உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம். செய்தித்தாள்களில் வெளியானதை அடிப்படையாக கொண்டு இடைக்கால உத்தரவு பிறப்பிக்க முடியாது. குறிப்பாக எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைகள், வாக்காளர் பட்டியல் தொடர்பான நடைமுறைகள் மற்றும் படிவம் 6ல் செய்யப்பட்ட மாற்றங்கள் உள்ளிட்ட விவகாரங்களும் இந்த வழக்குகளில் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

இரு வழக்குகளையும் ஒன்றாக இணைத்து விசாரிக்க உச்ச நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. திருத்தப்பட்ட படிவம் 6க்கு உச்ச நீதிமன்றம் ஒப்புதல் அளிக்கவில்லை என்பதை தெளிவுபடுத்திக் கொள்கிறோம். அந்த படிவத்தை திருத்தியது யார் என்பதை அறிய விரும்புகிறோம். எனவே இந்த விவகாரம் தொடர்பாக தலைமைத் தேர்தல் ஆணையர், இரு தேர்தல் ஆணையர்கள் மற்றும் ஒன்றிய அரசு ஒரு வாரத்தில் பதிலளிக்க நோட்டீஸ் பிறப்பிக்கப்படுகிறது என்று உத்தர விட்ட நீதிபதிகள், விசாரணையை ஒத்திவைத்தனர். எஸ்.ஐ.ஆர். விவகாரம் தொடர்பாக தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தன்னிச்சையாக முடிவு எடுத்தார் என்பது நிரூபிக்கப் பட்டால், அந்த முடிவுகளை உச்ச நீதிமன்றம் ரத்து செய்ய வாய்ப்பு உள்ளது. இது வரை 20 மாநிலங்களில் எஸ்.ஐ.ஆர். பணிகள் நிறைவடைந்துள்ளது.

இந்த மாநிலங்களில் 13 கோடி வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. இதில், தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்களில் எஸ்.ஐ.ஆர். பணிக்கு பின் சட்டப் பேரவை தேர்தல் நடைபெற்றுள்ளது. தமிழ்நாட்டை பொறுத்தவரை 74 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் எஸ்.ஐ.ஆர். பணியின்போது நீக்கப்பட்டன. சட்டப்பேரவை தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியின் தோல்விக்கு பெருமளவு வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டது முக்கிய காரணமாக உள்ளது. இந்த வழக்கு விசாரணையின் முடிவில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தன்னிச்சையாக பிறப்பித்த உத்தரவுகள் ரத்து செய்யப்பட வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

அப்படி அந்த உத்தரவுகள் ரத்து செய்யப்பட்டால், தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் முடிவுகளும் ரத்து செய்யப்பட்டு, எஸ்.ஐ.ஆருக்கு முந்தைய வாக்காளர் பட்டியல் அடிப்படையில் மீண்டும் தேர்தல் நடத்தப்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் முக்கியக் கருத்துகள்

* தேர்தல் ஆணையத்தின் எந்தவொரு முடிவும் சட்டத்துக்கு இணக்கமாக இல்லை என்பது தெரியவந்தால், அந்த முடிவை நாங்கள் ரத்து செய்வோம்.

* தேர்தல் ஆணையத்தின் முடிவுகள் ஒருமனதாகவோ அல்லது பெரும்பான்மை அடிப்படையிலோ எடுக்கப்பட வேண்டும்.

* தேர்தல் ஆணையத்தின் முடிவுகள் சட்டத்துக்கு உட்பட்டே எடுக்கப்படுகின்றன என்று நாங்கள் கருதுகிறோம்.

* திருத்தப்பட்ட படிவம் 6க்கு உச்ச நீதிமன்றம் ஒப்புதல் அளிக்கவில்லை.

* ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், அந்தப் படிவத்தை யார் திருத்தியது என்பதை அறிய விரும்புகிறோம்.

‘அனைத்து நிறுவனங்களும் அச்சமின்றி செயல்படுகின்றன’

உச்ச நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியிருப்பது குறித்து பா.ஜ. தலைமையகத்தில் செய்தியாளர்கள் கேட்டதற்கு பதிலளித்த அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் சம்பித் பத்ரா, “பொதுநல மனு தாக்கல் செய்வது, அதை உச்ச நீதிமன்றம் விசாரித்து மறுதரப்பு கருத்து தெரிவிக்க நோட்டீஸ் அனுப்புவது வழக்கமான நடைமுறைகள். இது ஜனநாயக, நீதித் துறை சார்ந்த ஒரு செயல்முறை. இது முறையாக நடைபெற்று வருகிறது. நாட்டில் உள்ள அனைத்து நிறுவனங்களும் சுதந்திரமாக அச்சமின்றி செயல்படுவதற்கான சான்று இது. அனைவரும் தங்கள் கருத்துக்களை வெளிப்படையாக பேசுகின்றனர். அனைத்து நடைமுறைகளும் அமைப்புகளும் பின்பற்றப்படுகின்றன. ஜனநாயகத்திற்கு இதைவிடச் சிறந்த ஒரு முன்மாதிரி வேறு எங்கே இருக்க முடியும்?” என்றார்.

மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல் நிலை என்ன?

தமிழகம் உள்ளிட்ட 20 மாநிலங்களில் வாக்காளர் சரிபார்ப்பு நடத்த தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இதற்காக முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அப்படி என்றால், தற்போது இடைத்தேர்தல் நடைபெறும் மதுராந்தகம், தாராபுரம் தொகுதியிலும் வாக்காளர் பட்டியல் சரிபார்க்காமல் நடைபெறுகிறது. தற்போது சரிபார்ப்பு இல்லாத தேர்தல் நடைபெறுவதும் நாளை தேர்தல் வழக்காக மாறும் நிலை ஏற்படும்.

பைக் ரேஸ் விவகாரம்: இது உண்மையா?

த.வெ.க. அரசு பதிலளிக்குமா?

போலீஸ் கமிஷ்னரின் உத்தரவைக் காப்பாற்ற அப்பாவி இளைஞர்கள் மற்றும் இளம்சிறாரை கைது செய்து பைக் ரேஸ் இளைஞர்கள் என முத்திரை குத்தப்பட்டு போலிக் குற்றவாளிகளை சிறையில் அடைக்கும் காவல் துறையினரால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் மற்றும் இளம்சிறாரின் குடும்பங்கள் அவதிப்படுகின்றன..

அவமானத்தால் பள்ளிக்கு செல்லமாட்டேன் என கதறும் மாணவர்கள் பெண்கள் ஓட்டி செல்லும் Fascino வண்டியில் அந்த வழியாக சென்றவர்கள் நம்பர் பிளேட்டுடன் சென்றதால் பெட்ரோல் பங்க்கில் பெட்ரோல் போடும்போது சிசிடிவியில் உள்ள வண்டி எண்ணை வைத்து குற்றவாளி என கைது செய்கிறார்களாம்..

நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் அருகேயுள்ள பகுதியில் பைக் ரேஸ் மற்றும் வீலிங் சாகசத்தில் சில இளைஞர்கள் அதிவேகமாக பைக் ஓட்டி பொதுமக்கள் மத்தியில் பெரும் பீதியை கிளப்பினர். மேலும் சற்று தொலைவில் கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் இரவு ரோந்துப் பணியிலிருந்த பாண்டிபஜார் கிரைம் இன்ஸ்பெக்டர் மீது வேகமாக சென்ற ஒரு இருசக்கர வாகனம் மோதி இன்ஸ்பெக்டர் காயமடைந்தார்.

மேலும் சென்னையில் பல இடங்களில் சனிக்கிழமை இரவு என்பதால் இளைஞர்கள் பைக் ரேஸ் சென்றும், வீலீங் செய்தும் வேகமாக ஓட்டிச்சென்றனர். இதனால் பொதுமக்கள் கோபமடைந்து பைக் சாகச இளைஞர்களை பிடித்து நடவடிக்கை எடுக்க ஆவேசமாக குரல் கொடுத்தனர். பல டிவி சேனல்கள், யூடியூப் உள்ளிட்ட சமூகவளை தளங்களில் இச்செய்தி வேகமாக பரவியது..

கடுப்பான சென்னை போலீஸ் கமிஷ்னர் இது போன்ற பைக் ரேஸ் மற்றும் சாகசத்தில் ஈடுபட்டவர்களை பிடித்து ரிமாண்டு செய்ய உத்தர விட்டார். அனைத்து ஸ்டேஷன்கள், குறிப்பாக நுங்கம்பாக்கம் ஸ்டேஷன் அலறியது. எங்கேங்கோ சிசிடிவி புட்டேஜ் பார்த்தார்கள். நம்பர் பிளேட் இல்லாத அராஜகத்தில் ஈடுபட்ட 10க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்கள் இருந்தன. ஆனால் அவற்றை ஓட்டிச்சென்றது யாரெனத் தெரியவில்லை.

கமிஷ்னர் உத்தரவை அமுல்படுத்த வேண்டுமே, என்ன செய்வதென்று தெரியாமல் நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் அருகிலுள்ள பெட்ரோல் பங்க் சி.சி.டி.வி.யை பார்த்து அங்கு பெட்ரோல் போட்ட அப்பாவி இளைஞர்களின் 3 இருசக்கர வாகனங்களின் பதிவு எண்ணை எடுத்தனர்.

அவர்களின் விலாசங்களுக்கு மதியம் போலீசார் சென்றனர். பெற்றோரிடம் ஸ்பெஷல் டீம் போலீசார் ரொம்ப அன்பாக பேசி சார் உங்க பையன் நேற்று நள்ளிரவு நுங்கம்பாக்கம் பகுதியில் பைக் ரேசில் ஈடுபட்டுள்ளான் என்றபோது பெற்றோர் எங்களது பையன் கட்டாயம் அந்தத் தவறுகளை செய்யமாட்டான் என எவ்வளவோ எடுத்து சொல்லியும் கேட்கவில்லை போலீசார் வண்டியை எங்களிடம் கொடுங்கள். நாங்கள் ஸ்டேசனுக்கு எடுத்துட்டு போறோம். நீங்க பையனை கூட்டிட்டு நுங்கம்பாக்கம் ஸ்டேசன் வாங்க, ஓண்ணுமில்லை. நார்மல் என்கொயரிதான். எழுதி வாங்கி கொண்டு அனுப்பிவிடுவார்கள். நாங்க பாத்துக்கிறோம் என கெஞ்சி பெட்ரோல் போட வந்த இளைஞர்களின் இருசக்கர வாகனத்தை கைப்பற்றிச் சென்றுள்ளனர்.

பெற்றோரும் பையன்களுடன் 04.10.2026 மதியம் நுங்கம்பாக்கம் போலிஸ் ஸ்டேசன் சென்றபோது, பையனிடம் பேசிவிட்டு உங்களை கூப்பிடறோம். நீங்க வெளியே வெயிட் பண்ணுங்கனு சொல்லிட்டு 6 மணி நேரமா என்ன பண்ணாங்கனுதெரியல. பெற்றோர் பலமுறை கேட்டபோதும் வெயிட் பண்ணுங்கனு சொல்லிட்டு திடீர்னு 10.15 மணிக்கு ஒரு பெரிய போலீஸ் வண்டி வந்து 5 இளைஞர்களை வாகனத்தில் ஏற்றி கேளம்சிக்கு சென்று அவர்களுக்கு மெடிக்கல் பிட்னஸ் வாங்கி அவசரமாக எக்மோர் நீதிபதி குடியிருப்பில் ஆஜர் படுத்தி புழல் ஜெயிலில் அடைத்தனர்.

இதில் போலிஸ் செய்த தவறுகள்.

1. கைது பற்றி அன்று மதியத்திலிருந்து காவல் நிலையம் வெளியே காத்திருந்த அப்பாவி இளைஞர்களின் பெற்றோரிடம் தெரிவிக்கவில்லை.

2. பைக் சாகசத்தில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்ட இளைஞர்களின் சிசிடிவி புட்டேஜ் இல்லை.

3. முக்கியமானது நண்பருடன் பெண்கள் ஓட்டி செல்லும் Fascino வாகனத்தில் நண்பருடன் பின்னால் அமர்ந்திருந்த 12ம் வகுப்பு படிக்கும் 16 வயது அப்பாவி பள்ளி மாணவனை கைது செய்து, இரவு 6 மணிக்கு மேல் ஸ்டேசனில் வைத்து விசாரித்துள்ளனர். இளம்சிறாருக்கான சட்ட வழிகளான குழந்தை நல அலுவலர் வரவில்லை. சாதாரண உடை போலீசார் இல்லை. லாக்கப் அருகில் 18 வயது பூர்த்தி அடைந்த மற்ற இளைஞர்களுடன் அமர வைத்து இரவு 10.15 மணிக்கு கைது செய்யபட்ட மற்ற இளைஞர்களுடன் காவல் வாகனத்தில் ஏற்றி சென்று 1 மணியளவில் கெல்லீஸ் சிறார் விடுதியில் கொண்டு சென்றபோது இளம்சிறார் மீதான குற்றச்சாட்டுக்கான ரிமான்ட் ரிப்போர்ட் தயார் செய்யவில்லை.

4. வேடிக்கை என்னவென்றால் இளம்சிறாரும் அவரது நண்பரும் பைக் சாகசத்தில் பயன்படுத்தியது என போலீசார் கைப்பற்றிய வண்டி, பெண்கள் ஓட்டி செல்லும் Fascino வண்டி.. இந்த வண்டியில் வீலிங்கோ, பைக் ரேசோ முடியாது.

5. 5ம் தேதி காலை வரை இளம்சிறாரை சட்டவிரோதமாக காவல் நிலையத்தில் வைத்து மன உளைச்சலுக்கு ஆளாக்கி அவரது அம்மா பயன்படுத்தி வந்த இருசக்கர வாகனம் என தெரிந்தும் காவல்துறையினர் சட்டவிரோதமாக அப்பாவி இளைஞர்கள் மீது நடவடிக்கை எடுத்துள்ளனர்.

6. குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பு எங்கே?

7. கமிஷ்னரின் ஆதங்கத்தை போக்க அப்பாவி இளையர்களை பலிகடாவாக்கிய போலீஸ் மீது மனித உரிமை மீறல் ஈடுபட்டதற்கு மனித உரிமை ஆணையம் நடவடிக்கை எடுக்குமா?

8. அவர்களை குற்றவாளியாக்கிய முக்கிய சிசிடிவி ஆதாரம் எங்கே?

9. கமிஷ்னருக்காக கட்டபஞ்சாயத்து செய்த அதிகாரிகள் எங்கே?

10. லஞ்சம் வாங்கும் போலீசார்மீது நேர்மையாக நடவடிக்கைகள் எடுக்கும் கமிஷ்னர், சட்டவிரோதமாக எந்த ஆதாரமும் இல்லாமல் அப்பாவி இளைஞர்கள் மற்றும் சிறார்களை பிடிக்க எந்த சட்டவிதிகளையும் கையாளாமல் சட்டவிரோதமாக செயல்பட்ட காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

11. கைது செய்யப்பட்டவர்கள் சாகசத்தில் ஈடுபட்டதாக கூறும் சிசிடிவி ஆதாரங்களை வெளியிடுவார்களா?

இது போன்ற கேள்விகளுக்கு த.வெ.க. அரசு பதிலளிக்குமா?